ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2371/59 - 2024 පෙබරවාරි මස 17 වැනි සෙනසුරාදා - 2024.02.17
2371/59 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி சனிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: 3/2/3/10/269-A(II).
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் தொடர்பு
இல.: 4/3/9/2016/WS/417.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தன கல்லை பிரதேச செயலகப் பிரிவில் இல. 363, வெலிக்கட முல்லை கிராம அலுவலர் பிரிவில் வெலிக்கடமுல்லை என்ற கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பாக கம்பஹா மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கம். 4229 மற்றும் 2021.01.26 ஆந் திகதியுடைய காணிப் பிரித்தெடுப்பில் காட்டப்பட்டுள்ள 3.9975 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி :

**முக்கிய குறிப்பு :-** இல. மு.பி.கம். காணிப் பிரித் தெடுப்பில் காணித்துண்டு இல. 14 என அடையாளப் படுத்தப்பட்டுள்ள காணித்துண்டு காணி எடுத்தற் சட்ட மூலத்தின் 39 (ஆ) 1 ஆம் பிரிவின் கீழ் எடுப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு இருப்பதால் மேற்படி காணி பிரித்தெடுப்பில் உள்ள முழுக்காணியின் விஸ்தீரணம் 4.9289 ஹெக்டயாரில் இருந்து 0.9314 ஹெக்டயார் குறைக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அத்தனகல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.பி. குணவர்தன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
அத்தனகல்லை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அத்தனகல்லை,
2023, திசெம்பர் 19.

EOG 02 - 0129

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIV/MW/LAD/CEPLA/6/1/11.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2018/HW/434.

2023, யூன் மாதம் 13 ஆந் திகதிய 2336/36 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் III ஆம் பிரிவின் கீழ் குறிப் பிடப்பட்டுள்ள காணியின் இ.கி.வ. 1525 பிற்சேர்க்கை இல. 06 தாள் இல. 06 வரைபடத்தின் துண்டு இல. 289 தொடக்கம் 314 வரையான காணித்துண்டுகள் 22 இன் உரிமையாளர் விசாரணை 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நீக்கப்பட்டு பதிலாக 2024, மாச்சு மாதம் 11 ஆந் திகதியாக மாற்றம் செய்யப்பட்டு கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் மூலம் அறிவிக் கின்றேன்.

| | |
|---|---|
| நீக்கப்பட்ட திகதி | - 2023, செத்தெம்பர் 27 |
| மாற்றம் செய்யப்பட்ட திகதி | - 2024, மாச்சு 11 |

எம்.எஸ். ஜானக,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மாவத்தகம,
2024, சனவரி 12.

EOG 02 - 0130

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: BD/HE/LND/05/56.
காணி மற்றும் காணி சீர்த்திருத்த அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/9/2015/WS/94.

2023.12.09 ஆந் திகதிய 2361/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் விபரிக்கப்பட்ட பக்கம் 3A இல் தோற்றும் திகதி 2024, சனவரி 24 ஆம் திகதி திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும் திகதி 2024, மாச்சு 27 என அறிவிக் கப்படுகிறது.

டபிள்யூ.எம்.சி. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஹாலி எல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹாலி எல,
2024, பெப்புருவரி 14.

EOG 02 - 0131